**O.S.    84/2024**
Date    :25.02.2026.

வா.சா.2    :ராஜாராம்

<u>வா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

நான் வாதியின் தந்தை ஆவேன். நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. நான் தன்னிச்சையாக என் மகனுக்கு சாட்சி சொல்ல வந்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞர் வரச்சொல்லியிருந்தார். நான் 10 ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழ், ஆங்கிலம் இரண்டுமே தெரியும் என்றால் தமிழ் நன்றாக தெரியும். ஆங்கிலம் அவ்வளவாக தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் புரிந்துதான் கையொப்பம் இட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்கை பற்றிய எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் போட்ட பாலிசி பேமிலி கெல்த் ஆப்டிமா 20.01.2021 தேதி போடப்பட்டு அதன் காலம் 10.01.2022 வரை முடிவுற்றது என்றால் தேதி சரியாக தெரியவில்லை. ஆனால் ஒரு வருட பாலிசியாகும். நான் எடுத்த பாலிசியில் உறுதி பத்திரத்தில் எனக்கோ, என் மகனுக்கோ, மகளுக்கோ எந்த நோயும் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது மகனுக்கு எந்த ஒரு வீக்கத்தைப்பற்றியும் கூறாமல் எடுத்துள்ளேன் என்றால் என் மகனுக்கு வீக்கம் இருந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது. நான் எனது மகனை மருத்துவமனையில் அனுமதிக்கும்போது வயது 18 வயது ஆகவில்லை என்றும் 1 7 வயதுதான் ஆகியிருந்தது என்றால் சரிதான். எனது மகனுக்கு இடது கால் கீழ் தொடையில் வீக்கம் இருந்தது என்று கூறி அது சில வாரங்கள் முன்பு சக விளையாட்டு வீரர்களோடு விளையாடும் போது மோதியதால் விபத்து ஏற்பட்டது என்றும் அது இடது கால் தொடையில் வெளிப்பக்கம் அரைகோணம் வடிவில் வீக்கம் உள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் எனது மகனை 30.04.2021 ல் காலை 6 மணிக்கு மருத்துவமனையில் அனுமதித்து 4.05.2021 அன்று வரை உள்நோயாளியாக இருந்துள்ளார் என்றால் சரியாக தேதி தெரியவில்லை. நான் பாலிசி எடுப்பதற்கு முன்பே இருந்த வீக்கத்தை மறைத்து பாலிசி எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணப்படி எனது மகனுக்கு பாலிசி எடுப்பதற்கு 2 வருடத்திற்கு முன்பே வீக்கம் இருந்ததுஎன்றால் எனக்கு தெரியாது. பாலிசி எடுக்கும் போது நிபந்தனைகளை படித்து பார்த்துள்ளேனா என்றால் ஏஜென்சியே எல்லாம் பார்த்து கொள்வார்கள். பாலிசி விதியின் நஷ்ட

தரும் விதியான 02F அதன்படி2 வருடம் (24 மாதம்) தவணை சரியாக கட்டினால் முந்தைய காலத்தின் ஏற்பட்ட நோயின் சிகிட்சைக்கு செலவினங்களை திருப்பி தரப்படும் என்றால் சரியல்ல. இது விபத்தாகும். நோயல்ல. நான் சிகிட்சை விடுப்பு அறிக்கையில் வேண்டுமென்றே தவறாக பல வாரங்களுக்கு முன்பு கூடைபந்து விளையாட்டின் போது காயம் ஏற்ப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது பையனுக்கு ஏற்பட்ட எலும்பு வளர்ச்சியின் காரணம் பிறவி நோயினால் ஏற்பட்டதாகும் என்றாலும், விபத்தினால் ஏற்பட்டதல்ல என்றாலும் சரியல்ல. விபத்தாகும். விபத்தினால் தசைதான் வீங்கும் என்றாலும், எலும்பு வீங்காது என்றாலும், எலும்பு வீங்கியதாக சொல்லவில்லை. எலும்பு உடைந்ததாகத்தான் சொன்னார்கள். சிகிட்சை விடுப்பு அறிக்கையில் குறிப்பிட்டது போல எனது மகனின் இடது கால் தொடை எலும்பில் வளர்ச்சி ஏற்பட்டு அதனால்தான் வீக்கம் ஏற்ப்பட்டுள்ளது என்றும், அந்த அதிகப்படியான எலும்பை அறுவை சிகிட்சை மூலம் அகற்றிவிட்டார்கள் என்றும் அதன் அளவு 10x7x3 என்றும் அதாவது 10 செமீ நீளம் 7 செமீ அகலம் 3 செமீ தடிமன் என்று கூறப்பட்டுள்ளது என்றும் மேலும் கூடுதல் வளர்ந்த எலும்பானது எந்தவிதமான ஆபத்தையும் நோயையும் ஏற்படுத்தாது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இழப்பீடை நிராகரித்த பின்பு சீனியர் மருத்துவரை எனக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால் தெளிவுபடுத்திக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சீனியர் டாக்டரை கன்சல்ட் செய்தேன். டாக்டர் பெயர், தேதி, தெரியுமா என்றால் தேதி தெரியாது. டாக்டர் பெயர் திரவியராஜ் ஆகும். மருத்துவர் என்ன சொன்னார் என்றால் எலும்பு உடைந்திருந்ததை அதை எடுத்து இருக்கிறார்கள் என்றும் வேறு பிரச்சினை இல்லை என்றும் சொன்னார்கள். அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் செய்துள்ளேன். என்னுடைய இழப்பீடு நிராகரித்த பின்பு நான் கிரிவேன்ஸ் ரெட்ரசல் ஆபிசருக்கு புகாரை கொடுக்க சொல்லப்பட்டுள்ளது என்றால் நான் கொடுத்துள்ளேன். தேதி தெரியாது. நான் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் செய்துள்ளேன். ஆபீஸ் ஆப் இன்சூரன்ஸ் ஆம்புட்ஸ்மெனில் நான் கொடுத்த புகாரை இது விபத்து அல்ல நோய் என்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அவர்கள் பதிலே சொல்லவில்லை. அவர்கள் தள்ளுபடி செய்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய புகாரைத்தான் தாக்கல் செய்தேன். நான் என் வழக்குரையில் ஆபீஸ் ஆப் இன்சூரன்ஸ் ஆம்புட்ஸ்மெனில் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவர்

தள்ளுபடி செய்த காரணத்தினால்தான் அவரை 2ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் பதில் சொல்லாததால் சேர்த்து கொடுத்தேன். நான் கேட்கிற ரூ.2,37,760/- எனக்கு சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எனது மகனுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.